★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 20உ திங்கள் (5—11—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 21உ செவ்வாய் (6—11—56) [இதழ் 126

'பெண்களுக்கு யோகாசனப் பயிற்சி அளிக்க வேண்டும்'

புதுடில்லி, நவ. 3—

யோகாசனப் பயிற்சியின்மீது மத்திய சுகாதார மந்திரி இராஜகுமாரி அமிர்தகௌரிக்கு திடீரெனக் 'காதல்' பிறந்துள்ளதாம்!

'அந்தப் பயிற்சி மிகுந்த பலனுள்ளது என்பதை ஒப்புகிறேன்' என்று கூறிய அவர், 'அது நாடு முழுவதும் பரவ வேண்டும்; பலரும் அந்தப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்', என்றும் சிபாரிசு செய்தாராம்!

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இப்பயிற்சி அளிக்க ஏற்பாடு வேண்டும் என்றும், பெண்களுக்கும் இப்பயிற்சி தரப்பட வேண்டும் என்றும், அவர் கூறினாராம்!

வடக்கு-தெற்குவாதம் அபத்தமாம்!

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி அழுகுரல்

தி. மு. க. மீது பாய்ந்து திருப்தி தேடும் போக்கு

திருச்சியில் 'மூவர்' முகாரி

திருச்சி, நவ. 4—

தி. மு. க. மீது பாய்ந்து திருப்தி தேடும் படலத்தில் ஈடுபட்டிருக்கின்றனர், மதிமந்திரிகள் மூவர்—காமராசர், பக்தவத்சலம், சுப்பிரமணியம் ஆகியோர்!

'தி. மு. க. 150 இடங்களில் ஏன் போட்டியிடுகிறது தெரியுமா?' என்று துவக்கி, பெரும் முகாரி பாடினராம், அவர்கள்!

'வடக்கு—தெற்கு என்று பேசுவது பெரும் அபத்தம்,' என்று வேறு கூறினராம், அந்த 'மும்மூர்த்தி'களும்!

ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் அந்த 'மூவர்' அழுகுரல் எழுப்பினராம், திருச்சிக் கூட்டத்தில்!

காமராசர்

"வடநாடு தென்னாட்டை அடிமைப் படுத்தியிருக்கிறது—ஆதிக்கம் செலுத்துகிறது என்பதெல்லாம் அபத்தம்; வெள்ளைக்காரர் வெளியேறியதுமே எல்லா ஆதிக்கமும் அகன்றுவிட்டது — ஒழிந்துவிட்டது!

"வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட தமிழர்கள், எந்த மூலையிலிருந்து வரும் ஆதிக்கத்தையும் சகித்துக்கொள்ளமாட்டார்கள்"

என்றெல்லாம் புலம்பினாராம் காமராசர்!

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2,500 கோடி வேண்டுமென இவர்கள் கேட்கின்றனர்.

"பெரிய தொழிற்சாலைகள் நிறுவத் தேவையான, மூலப் பொருட்கள் நம்மிடம் இல்லை; எனவே, இவர்களது கோரிக்கை நியாயமானது அல்ல! இந்தத் தொகையைச் செலவிட என்ன உருப்படியான திட்டம் இவர்களிடம் இருக்கிறது?"

என்று வேறு கேட்டாராம், காமராசர்!

"உருப்படியான திட்டம் தந்தால் நான் உடனே பதவியிலிருந்து போய்விடுகிறேன்,"

என்றும் பிதற்றினாராம், காமராசர்!

"நாங்கள் என்றும் ஆட்சியிலேயே இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை; மக்கள் விரும்பினால் தொடர்ந்து பதவியிலிருப்போம்—வேண்டாம் என்றால் விலகிக்கொள்கிறோம்,"

என்று நமது கழகம் 150 இடங்களில் போட்டியிடப்போகிறது என்ற செய்தி தந்துள்ள குலை நடுக்கத்தால்—கிலியால் பிதற்றினாராம், காமராசர்!

சுப்பிரமணியம்

"எந்த அடிப்படையில் தி. மு. கழகத்தினர் காங்கிரசை எதிர்க்கப் போகின்றனர்? வடநாட்டார் ஆதிக்கம் பற்றி அவர்கள் கூறுகின்றனர்; தமிழர்களுக்கு சுய நம்பிக்கையும் தைரியமும் உண்டு; கோழைகள்தான் ஆதிக்கத்தைக்கண்டு பயப்படுவார்கள்"

என்று, 'வீரம்' பேசினாராம், இந்தக் கோவைக் குமரன்!

(இந்த இடத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டதாக 'தினமணி' தெரிவிக்கிறது.)

"தொழில் வளத்தில் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டது என்பது இவர்களது அடுத்த கோஷம்; இதை ஓரளவுக்கு நான் ஒப்புக்கொண்டுள்ளேன். (பெரும் ஆரவாரப் பேரொலி.)

"கொஞ்சம் பொறுமையாக இருந்து நான் கூறுவதைக் கேட்டு நீங்கள் பின்னால் கை தட்டலாம். (மீண்டும் பலத்த கைதட்டல்)

"பம்பாய் போன்ற இடங்களில் உள்ள பணக்காரர்கள், அப்பகுதியை தொழில் மயமாக்க நிரம்ப செலவிடுகின்றனர்; தென்னாட்டில் உள்ளவர்கள், விவசாயத் துறையில் கவனம் செலுத்துகின்றனர்.

"பின்தங்கிய மாநிலங்கள் எல்லாம் இரண்டாம் திட்டத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று திட்டக் குழு முடிவு செய்துள்ளது.

"கவிதை மூலமோ, பிரச்சாரத்தின் மூலமோ புதிய தொழில்களை ஆரம்பித்துவிட முடியாது; இதற்குக் கச்சாப் பொருள் வேண்டும்,"

என்று வேறு முகாரி பாடினாராம், சுப்பிரமணியம்!

பக்தவத்சலம்

"சுதந்திர தினத்தை 'துக்க தினமா'கக் கொண்டாடும் இந்தத் தி. மு. கழகத்தினர் போக்கு எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை,"

என்று, பெரும் பொய்யைத் துணிந்து கூறினாராம், இந்த 'விடுதலை வீரர்' பக்தவத்சலம்!

"சுதந்திரத்திற்காகப் போராடிய காலத்தில், இந்த தி. மு. கழகத்தினர் எங்கே போயிருந்தனர்?"

என்று வேறு கேட்டாராம், அந்த மதி மந்திரி!

'உலகம் முழுவதுமே நேருஜி காட்டும் வழியை எதிர்நோக்கியுள்ளது' என்று கூறி, பிறரை ஏமாற்ற நினைத்ததுமன்றி, தன்னையும் தானே ஏமாற்றிக் கொண்டாராம், இந்த மந்திரி பக்தவத்சலம்!

"அப்படிப்பட்ட நேருஜி நமக்குத் தலைவராயிருக்க வேண்டுமா? இந்த அண்ணாதுரை தலைவராயிருக்க வேண்டுமா?"

என்று வேறு கேட்டாராம், அந்த மதி மந்திரி!

காங்கிரசுக்கு 'தலை முழுக்கு'

மந்திரிப் பதவியை உதறி எறிந்தார்

அசாமில் சம்பவம்

ஷில்லாங், நவ. 2—

அசாம் மந்திரி ஒருவர் காங்கிரசுக்கு தலைமுழுக்குப் போட்டுவிட்டு, மந்திரி பதவியையும் வீசி எறிந்திருக்கும் சம்பவம் பற்றி தகவல் கிடைத்துள்ளது.

காங்கிரஸ் உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட மறுத்துவிட்ட நிகலஸ்ராய் என்ற அசாம் மாநில ரெவினியூ மந்திரி, முதன் மந்திரி விஷ்ணுராம் மெஹ்திக்கு தனது இராஜினாமாவை ஏற்குமாறு கடிதம் எழுதியுள்ளார் என்றும், அவர் டிசம்பர் முதல் தேதியிலிருந்து பதவியைவிட்டு விலகுவார் என்றும் கூறப்படுகிறது.

சென்னையில் தமிழக அமைப்பு விழா

பொதுச்செயலாளர் கலந்துகொண்ட சிறப்பான நிகழ்ச்சி

"தமிழக அமைப்பை, பல கட்சிகள் சேர்ந்து நடத்தும் இந்த மாபெரும் கூட்டம் வரவேற்பதுடன், ஆந்திர—கேரள மாநிலங்களில் விடப்பட்டுள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்படாதது குறித்து வருந்துகிறது.

"அந்தப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதுடன், தமிழகத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிடவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

"தமிழ் நாடு என்று பெயரிடவேண்டுமென தமிழ் மக்கள் ஒருமுகமாகக் கோரியும் சென்னை அரசாங்கம் இதற்கு செவிசாய்க்காமலிருப்பது கண்டு இக்கூட்டம் மிகவருந்துகிறது; உடனடியாகத் தமிழ் நாடு எனப் பெயர் மாற்றவேண்டுமென வலியுறுத்துகிறது.

"இப்போது தமிழ் நாட்டில் தமிழர்களே இருப்பதால், தமிழ் மொழி உடனடியாக ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும் என்று இக்கூட்டம் கோருகிறது.

"தமிழ் மக்கள், இதர மக்களின் மொழிவழி மாநிலக் கிளர்ச்சிக்குத் தங்கள் ஆதரவை நல்குவர் என்றும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது"

—என்று, சென்னை கோகலே மண்டபத்தில் 4—11—56 அன்று புதிய தமிழக அமைப்பை ஒட்டி நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டம் ஒன்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

"மொழிவழியில் மாநிலங்களை அமைத்துக் கொண்ட இதர மாநில மக்களை இக்கூட்டம் பாராட்டுவதுடன், மக்கள் விருப்பத்திற்கு விரோதமாக, மராட்டிய—குஜராத்தி மக்கள் மீது இருமொழி மாநிலத்தை மத்திய சர்க்கார் திணித்திருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

என்று, மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் முதலிய பல காங்கிரசல்லாத கட்சிகள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்திற்கு தோழர் எச். டி. இராசா எம்.பி., தலைமை தாங்கினார்.

அவர் தனது தலைமையுரையில், தமிழ் நாட்டில் காங்கிரசாட்சி உள்ளவரையில் ஆந்திர—கேரள மாநிலங்களில் விட்டுப்போன பகுதிகளை மீட்க முடியாது என்றும், டில்லி சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்கள்தொகைக்கணக்குப்படி ரூ. 400 கோடியாவது ஒதுக்கித் தந்திருக்கவேண்டும் என்றும், அதுகூட தராமல் டில்லி தமிழர்

(4-ம் பக்கம் பார்க்க)

10 ஏகர் நிலம் வைத்திருப்போர்

பயப்படத் தேவையில்லையாம்!

திருச்சி, நவ. 3—

"10 ஏகர் நிலம் வைத்திருப்பவர்கள், எந்தவித நடுக்கமும் கொள்ளத் தேவையில்லை"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் உறுதிமொழியளித்தார் என்று தெரியவருகிறது.

நியாயவாரச் சட்டம் குறித்துப் பேசுகையிலேயே அவர் அந்த உறுதிமொழி தந்தாராம்!

இந்தியாவில் காஸ்டிக் சோடா உற்பத்தி 1946-ல் மொத்தம் 2,900 டன்னாக இருந்தது—1955-ல் 34,250 டன்னாக உயர்ந்துவிட்டது.

*********-*****************************

நவம்பர் 11:

தமிழக அமைப்பு நாள் விழா

★

அகத்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நாஞ்சில் பகுதியைச் சார்ந்த நான்கு வட்டங்களும், செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியும், நவம்பர் முதல் நாளிலிருந்து தமிழ் மாநிலத்துடன் இணைந்துள்ளதை வரவேற்று மகிழவும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சின்—சித்தூர், பாலக்காடு ஆகிய வட்டங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மாநிலத்தோடு இணைக்கும்படி மத்திய—மாநில அரசியலாரை வற்புறுத்தவும், நவம்பர் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை தமிழக அமைப்பு நாள் விழாவாகக் கொண்டாடும்படி நாடெங்கிலுமுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நவம்பர் 2-ம் நாளன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நாகர்கோயிலில் நடைபெற்ற இணைப்பு விழாவில் நான் கலந்துகொண்டு நம் கழகச் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.

அன்பன்

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****************************-***********

நம் நாடு

சென்னை 5—11—56 திங்கள்

பண்டிதர் துணிவாரா?

இஸ்ரேலின் அக்கிரமத் தாக்குதலுக்கு ஆளாகி தற்காத்துக் கொள்ளும்நினைப்புடன் போர்க்களத்தில் கடும் போரிட்டுக் கொண்டிருந்த எகிப்தின்நெருக்கடியான நிலையை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பிரிட்டனும் பிரான்சும் எகிப்து நாட்டைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கிவிட்டன. வல்லரசுகளின் நிலையில் இன்றும் இருந்துவரும் பிரிட்டன்—பிரான்சு ஆகிய இரு நாடுகளும் மேற்கொண்டுள்ள பலத்தத் தாக்குதலைத் தாங்கிக்கொள்வது என்பது இன்றைய எகிப்து நாட்டுக்கு சிரமமானதாகும்.

தங்களுடைய விமானப் படை, கடற்படை ஆகிய இரு வகைப் படைகளையும் கொண்டு எகிப்து நகரங்கள்மீது குண்டு மாரி பொழிந்துவரும் பிரிட்டனும்—பிரான்சும், அப்போர் நடவடிக்கைகளை 'போலீஸ் நடவடிக்கைகள்' என வெட்கமின்றியும் விவேகமின்றியும் கூறிவருகின்றன. அவைகளின் கூற்றுப்படி, அவைகளின் தாக்குதலை 'போலீஸ் நடவடிக்கைகள்' என்றேகொள்வதானாலும், எகிப்துமீது வலியத் தாக்குதல் நடத்துவதற்கு இவைகளுக்கு உரிமை கிடையாதே என்ற நியாயம் இவ்விரு அரசுகளுக்கும் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை.

அபிசீனியாமீது வலியச் சென்று தாக்கிய முசோலினியின் செய்கையிலும், போலந்துமீது தாமாக முன்வந்து தாக்குதலைத் துவங்கிவைத்த இட்லர் செய்கையிலும் எத்தகு அநீதி நிரம்பி இருந்ததோ, அதே அநீதிதான், எதிர்பாராத நேரத்தில் எகிப்தின்மீது கோரமாகக் குண்டு வீசிவரும் பிரிட்டன்—பிரான்சின் வெறிச்செயலிலும் அடங்கி இருக்கிறது.

ஐக்கிய நாட்டுச் சபையின் உறுப்பினர்களாகப் பிரிட்டனும் பிரான்சும் இருந்து வருகின்றன. அந்தச் சபையின் அடிப்படை இலட்சியங்களைக் காப்பதிலும், அந்தச் சபையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதிலும், அந்தச் சபையின் மற்ற உறுப்பினர்களுக்கு இருந்துவரும் அளவு கடமை போன்றுதான் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இருந்துவருகிறது. எகிப்து நாட்டின்மீது வலியத் தாக்குதல் நடத்துவதின் மூலம், ஐக்கிய நாட்டு சபைக்குத் தாங்கள் செய்யக் கட்டுப்பட்டுள்ள கடமையை வேண்டுமென்றே பிரிட்டனும் பிரான்சும் செய்யத் தவறி விட்டிருக்கிறது. வேண்டுமென்றே செய்துள்ள இப்பெருந் தவறு மன்னிக்கக் கூடியதன்று.

எகிப்தை வலியச் சென்று தாக்குவதின் மூலம், ஐக்கிய நாட்டுச் சபைக்குத் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறியிருப்பதுடன் மட்டுமல்லாது, ஐக்கிய நாடு சபையின் அடிப்படை இலட்சியங்களிலும், அச்சபையின் முடிவுகளிலும், துவக்க முதலே பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் நம்பிக்கை இல்லை என்ற உண்மையும் தெளிவாகிவிட்டது.

தனக்குள்ள நாடு பிடிக்கும் வெறி இன்னமும் தனக்கு இருந்துவருகிறது என்ற உண்மையை, ஒளிவுமறைவு இல்லாமல், தனது போர்ச் செயலின் மூலம் பிரிட்டன் உலகுக்கு அறிவித்து விட்டது. செயல் மூலம் தன்னால் வெளிப்படுத்தியுள்ள உண்மையை, இனி பிரிட்டனால்கூட மறைத்துவிட முடியாது.

பிரிட்டனின் தாக்குதல் கண்டு தாம் திடுக்கிட்டுப் போனதாக இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துள்ளார். அதுவுமன்றி, பிரிட்டனின் தாக்குதலில் அடங்கியுள்ள அநீதியையும், அக்கிரமத்தையும், நாடு பிடிக்கும் வெறியையும் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்.

நாடு பிடிக்கும் ஆசையை பிரிட்டன் இன்றளவும் விட்டொழிக்கவில்லை. ஐ. நா. சபை முடிவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க பிரிட்டன் விரும்பவில்லை.

ஐ. நா. சபையின் இலட்சியங்களைக் காத்துவருவதாக எடுத்துக்கொண்டுள்ள வாக்குறுதியைக் காப்பதில் பிரிட்டனுக்கு அக்கரை இல்லை.

ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகளில் முடிவு காண போர் முறையையே சிறந்ததென பிரிட்டன் கருதிக் கொண்டு இருக்கிறது.

இத்தகு இழிந்த போக்கு கொண்டதாக பிரிட்டன் இன்றும் இருந்துவருகிறது.

இந்தக் காலத்திலும் ஏகாதிபத்திய வெறிக்குணம் படைத்திருக்கும் பிரிட்டனுடன், இந்தியத் துணைக்கண்டம் நெருங்கிய உறவு வைத்திருப்பதை நியாயமானது — நேர்மையானது என ஒப்புக்கொள்பவர் எவரும் இருக்கமுடியாது. ஏகாதிபத்திய வெறிகொண்டிருக்கும் பிரிட்டனை நடுநாயகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பில், இனியும் இந்தியா ஒரு உறுப்பாக இருந்து வருவது துளியும் பொருந்தக்கூடியதாகாது.

உலகப் பெரும் போரைத் தூண்டிவிடக்கூடிய வகையில், எளியநாட்டை வலியச்சென்று தாக்கும் பிரிட்டனை நடுநாயகமாகக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பில் ஒரு அங்கமாக, பஞ்சசீலம் பேசிவரும் இந்தியத் துணைக்கண்டம் இருந்துவருவது, எந்த நியாயத்துக்கும் பொருந்தக் கூடியதாகாது என்பதுடன், முரண்பாடு கொண்டிருப்பதுமாகும்.

எனவே, இந்தியப் பிரதமர் நேரு, தனது பஞ்சீலக் கொள்கையை செயலாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், காமன்வெல்த் அமைப்பிலிருந்து, இந்தியத் துணைக்கண்டத்தின் கூட்டுறவைத் துண்டித்துக்கொள்ளும் பணியை, தனது முதற் கடமையாகக் கொள்ள வேண்டும்.

இதற்கு இந்தியப் பிரதமர் தயாராக இல்லை என்றால், பிரிட்டனின் தாக்குதல்குறித்து அவர் வீசியுள்ள கடுஞ் சொற்களும், எகிப்து நெருக்கடி கண்டு அவர் சிந்தும் கண்ணீரும் வெறும் அலங்காரமாகும் என்றுதான் நல்லறிவாளர் முடிவு கட்டுவர்.

மாநில அமைப்பில் மாறுதல்கள்

ஒரு கண்ணோட்டம்

புதிய மாநில அமைப்பு அமுலுக்கு வந்த பின்னர் ஒருசில முக்கிய மாற்றங்கள் காணப்படுகின்றன:—

வங்காள விரிகுடா கடல், அரேபியக் கடல், இந்துமகா சமுத்திரத்தின் கூட்டுக்கேந்திர இடத்தில் உள்ள கன்னியாகுமரி, இதற்கு முன், திருவாங்கூர்—கொச்சியில் இருந்தது; இப்போது சென்னை மாநிலத்தில் உள்ளது.

உலகப் புகழ்பெற்ற எல்லோரா, அஜந்தா குகைகள் ஐதராபாத்தில் இருந்தன; இப்போது பம்பாய் மாநிலத்தில் உள்ளன.

இதற்குமுன், ஆப்பிரிக்க சிங்கங்கள் நடமாடும் காடுகள் சௌராஷ்டிராவில் இருந்தன; இப்போது அந்தக் காடுகள் பம்பாய் மாநிலத்தில் உள்ளது.

இதற்கு முன் பம்பாயில் இருந்த 'மவுண்ட் ஆபு' என்னும் கோடைக்கால மலைப் பிரதேசம், தற்போது இராஜஸ்தானில் உள்ளது.

'ரிக்கார்டு'களில், கீழ்க்கண்டுள்ள பெயர்கள் இனி இடம் பெறாதவாறு மறைந்துவிடும்—திருவாங்கூர் கொச்சி, ஐதராபாத், கூர்க், போபால், சௌராஷ்டிரா, கட்ச், மத்திய பாரத், ஆஜ்மீர், விந்தியப் பிரதேசம், பெப்சு

பரப்பளவில் பெரிய மாநிலம் பம்பாய்; சிறியது கேரளம்.

மக்கள் தொகையில் முதலிடம் பெறுவது உத்திரப்பிரதேசம்; குறைந்த மக்கள் தொகையுள்ளது ஜம்மு—காஷ்மீர் மாநிலம்.

ஐக்கிய நாடுகளில், கேரளத்தின் பரப்பளவாகிய 15,000 சதுர மைல்களைவிட குறைவாக ஆறு நாடுகள் உள்ளன.

1947-ம் ஆண்டில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தபோது இந்தியாவில் 600 சமஸ்தானங்களுக்கு மேல் இருந்தன.

சர்தார் பட்டேல் அதை 28-ஆக மாற்றி அமைத்தார்.

தற்போது, புதிய மாநில அமைப்பில்—இந்தியாவில் 14 மாநிலங்களும், 6 பகுதிகளுமே உள்ளன.

முன்னர் மாநிலங்களின் தலைநகரங்களாக விளங்கியவை, தற்போது அமுலாக்கப்பட்டுள்ள மாநிலங்களின் அமைப்பில் தலைநகரங்களாக இல்லை; அவை வருமாறு:—

கர்னூல் (ஆந்திரம்); மெர்காரா (கூர்க்); இராஜகாட் (சௌராஷ்டிரா); பூஜ் (கட்ச்); இன்டோர்—குவாலியர் (மத்திய பாரத்); ரீவா (விந்தியப் பிரதேசம்); ஆஜ்மீர் (ஆஜ்மீர்); பாட்டியாலா (பெப்சு).

கடந்த 100 ஆண்டுகளாக தலைநகரமாக விளங்கிய நாகபுரி, இப்பொழுது சாதாரண நகரமாகிவிட்டது.

வட சென்னையில் தண்ணீர் வசதிக்குத் திட்டம்

சென்னை, நவ. 1—

வட சென்னையில் குடிதண்ணீர் வசதியை அதிகரிக்க ரூ.60,33,000 செலவில் 30 அங்குலக் குழாய் அமைக்கும் திட்டம் ஒன்றை சென்னை நகரசபை தயாரித்துள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை நகரசபைக்கு ரூ. 120 இலட்சம் அரசாங்கம் கடன் அளித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

எதிர்கால உலகம் எப்படி இருக்கவேண்டும்?

'அணு ஆயுதங்கள் ஒழிய வேண்டும்; அடிமை நிலை மாறவேண்டும்'

எல்லோருக்கும் உரிய வாய்ப்புகள் வேண்டும்

மிகவும் செழிப்பாக வாழும் வகையை நெருங்கிவிட்ட அதே நேரத்தில் படுபாதாளத்தில் விழத்தக்க நிலையையும் அணுகியிருக்கிறோம்; இதுதான் மிகவும் கேலிக்கூத்தான விஷயம்.

'படுபாதாளத்தை எட்டிப்பார்க்கும் விளிம்பிலேயே இருக்கிறோம்; எந்நேரத்திலும் தவறிவிடலாம்,' என்று சொல்வதே இன்னும் பொருத்தமாக இருக்கலாம்.

அணுவைப் பிளந்து, அதனால் வெளிப்படும் சக்தியைக்கொண்டு மக்களைக் கூட்டங் கூட்டமாகக் கொன்றொழிக்கலாம் என்பதை நிரூபித்துவிட்டு, நாம் ஹிரோஷிமாவில் முதன் முதலில் விழுந்த அணுகுண்டைக் காட்டிலும் பத்து மடங்காகிலும் அதிக அழிவாற்றல் படைத்த குண்டுகளைத் திறம்படச் செய்யும் வேலையை ஒலியினும் அதிவேகமாக முனைந்து முடித்து வருகிறோம். அதுவும் போதாதென்று, அணு ஆயுதம் இன்னென்று செய்துவிட்டோம்; உலகில் மனித இனத்தையே பூண்டற்றுத் தீய்த்துத் துடைக்க வல்லது அது என்பது பற்றிச் சற்றேனும் ஐயம் இல்லை.

சரித்திரம் போர் வீரர்களை வானளாவப் புகழும்படியாகச் செய்திருப்பதும், போர்க் களத்தையும் நாடு பிடிப்பதையும் அது வற்புறுத்திப் பேசியிருப்பதும் நினைக்க நினைக்க வருத்தம் விளைகிறது. ஆயினும் சரித்திரத்தின் போக்கை இடைமறித்து மாற்றுவதற்கு இன்னும் காலங் கடந்து போகவில்லை; மேலும், போரிலேதான் இனி என்ன புகழ் இருக்கிறது? பொது மக்கள் கண்டு களிக்கப் பொது அரங்கில் வாளேந்திச் சண்டை செய்த பழைய வீரர்கள் காலம் மலையேறிவிட்டது; கதையாகவும் பாட்டாகவும் கேட்டு மகிழும் படை மறமும் அவ்வாறே பழங் கதையாகி விட்டது. எவ்விடும் ஆளில்லாக் குண்டு விமானமும், நெடுந்தூரஞ் சென்று குண்டு வீசும் விமானமும் எங்கெங்கு வேண்டுமோ அங்கங்கு சென்று அணு குண்டு நாசத்தை விளைவித்துவரக் கூடியவையாயிருப்பதால், நார்மண்டியைப் பிடித்த வீரச் செயல்கூடப் பண்டைக் காலப் படையெழுச்சியாகிவிட்டது. போர் என்பது பூண்டறத் தேய்த்துத் துடைப்பது என ஆகிவிட்டது; அதில் மனித உள்ளத்தைப் பெருமைப்படுத்தக்கூடியது இனி ஒன்றுமே இல்லை.

வல்லரசுகள் எனப்படும் நாடுகளிடம் தீய குண்டுகளும் மாபெரும் படைகளும் இல்லாமல் தீர்ந்து போவதால் அவை வல்லரசுகளாக இல்லாது போகவே, என்ன ஏற்படும்? ஆயுதம் படைத்த எதேச்சாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியாளருக்கு இனி அடி பணிய வேண்டுவதில்லை என்று, அடிமைப்பட்ட மக்கள் உடனே விடுதலையடைவர்; உலகத்தையெல்லாம் மீட்கப் போவதாகக் கூறும் கொள்கைக்கும் அடிப்படை அற்றுப் போகும்; ஏனெனில், அடிமை நாடுகளிலுள்ள மக்களின் இயற்கையான ஆவல்களைத் தடுப்பதற்கு அவர்களை அடக்கி ஆளுவோருடைய ஆயுத பலத்தைத் தவிர வேறென்ன உண்டு?

எல்லா நாட்டு மக்களும் விடுதலையடைந்ததும், மனிதர்க்குள் உள்ள உறவைக் கெடுக்கும் கடைசிக் காரணத்தையும் போக்கியவர்களாவோம்.

உலகத்தில் தன்னுரிமை இல்லாதிருக்கும் நாடுகளை; நாடுகள் சேர்ந்த குடும்பத்திலிருந்து பிரித்து வைத்து அவற்றின் ஒத்துழைப்பு உலகத்துக்குக் கிடைககவொட்டாமல் செய்வதற்கு மாறாக, அவற்றுக்கு உரிய அரசியல் சுதந்திரத்தையும் மற்றுமுள்ள அடிப்படைச் சுதந்திரங்களையும் வழங்கவேண்டிய நாளாகிவிட்டது.

அந்த நாடுகளின் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்வைத் தாங்களே நிர்ணயித்துக்கொண்டு, தங்கள் வளங்களை அந்நிய எசமானர்களுடைய நன்மைக்காக அன்றித் தங்கள் நன்மைக்காகத் தங்களுக்குச் சரியென்று தோன்றும் வகையில் அபிவிருத்தி செய்து, கடைசியில் நம்முடைய சபைகளில் நமக்குச் சரிசமமான சுயாதிபத்திய நாட்டினராக அமர்ந்திருக்கும்படி அவர்களை விட்டுவிடுவதற்குரிய காலம் வந்துவிட்டது. அப்பொழுதுதான் மனிதத் துயர் களைவதற்கு இன்னும் தொடங்கவேண்டியிருக்கும் மாபெரும் திட்டங்களில் உண்மையான உலக ஒத்துழைப்பு ஏற்படும் புத்துலகம் ஏற்படும்.

காலக் கணக்கின்றி இருந்த காலனி ஏகாதிபத்தியம் ஆக்கிய சேற்றினின்று ஆசியாவும் ஆப்பிரிக்காவும் வெளிவருவதை நாம் காண்போம்.

கொள்ளைநோய்ச் சகதிகள் ஒழியவேண்டும்; சொத்துரிமை இழந்தவனுக்குப் பொல்லாத பூச்சிகளும் கிருமிகளுமே இடையறாத் தோழராயிருப்பது தொலைய வேண்டும்.

சுதந்திர மேற்கத்திய உலகம் என்னும் சுகமான பகுதியில், மனிதர், எண்பது வயதுவரைக்கும் வாழ, உலகத்தில் மற்றொரு பகுதியில் மக்கள் முப்பதில் மடிவது மாற வேண்டும்.

உற்பத்தி செய்யும் பொருள்களுக்குநியாயமான விலைகிடைத்தல், மேற்கத்தியச் செல்வர்களின் கம்பெனிக் கூட்டுகளின் வலிமையால் பறிக்கப்படாதபடி வாழும் சுதந்திரம், சொந்த நாட்டு வளத்தால் தேசியப் பொருளாதாரத்தைச் சமநிலைப்படுத்தல்-நெடுநாளாகக் கிடைக்காமல் இருக்கும் இத்தகைய நன்மைகள் கிடைக்கும்படியாக சர்வதேச வாணிபத்தில் சமத்துவமான வாய்ப்பு ஆசியாவுக்கும்—ஆப்பிரிக்காவுக்கும் இந்த நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் கிடைக்கவேண்டும்.

மனித சுதந்திரம் கடைசிவரை பூரணமாக இருக்கவேண்டும். இரும்புத் திரைகளெல்லாம் எடுபடவேண்டும்; அறிவுக்கும் செய்திக்கும் அடைப்புகளாக இருப்பவையெல்லாம் அழிந்து மறையவேண்டும். 'ஆளப்படும் அடிமைகள்' என இனி யாரும் இருத்தல் கூடாது; யாவரும் சுதந்திர மக்களாகவே இருக்கவேண்டும். இனி எசமானர்களும் கூடாது, அடிமைகளும் கூடாது.

—'எதிர்காலத்தில் உலக நாடுகளின் குடும்பம்' என்ற தலைப்பில், ஐ. நா. சபையில் பிலிப்பைன் நாட்டு நிரந்தரப் பிரதிநிதியாக உள்ள ஜெனரல் கார்லோஸ் பி. ரோமுலோ என்பவரின் பேச்சுத்தான் மேலே தரப்பட்டுள்ளது; அவர், நூலாசிரியராகவும், அரசியல் மேதையாகவும் புகழ்பெற்று விளங்குபவர்.

எவ்வளவு தெரியுமா?

இரண்டாவது திட்ட காலத்தில் நாட்டில் கனி எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டு பிடிப்பதற்காக மொத்தம் ரூ. 30 கோடி செலவு மதிப்புள்ள திட்டமொன்றை இந்திய சர்க்கார் தயாரித்திருக்கின்றனர்.

தாயக நல் வேட்கையால் உயிர் ஈந்த உத்தமருக்கு!

விடுதலை வீரர்களின் வணக்கம்

திராவிடமெங்கும் கழகத் தோழர்கள் காட்டிய அனுதாபம்

விருதுநகர் வீரர் திரு. சங்கரலிங்கனார் அவர்களுக்குத் தங்கள் தங்கள் அனுதாபத்தையும், இறுதி மரியாதையையும் உரித்தாக்குமாறு பொதுச்செயலாளர் அவர்கள் கழகத் தோழர்களை வேண்டிக் கொண்டதற்கிணங்க, நாடு முழுமையிலுமுள்ள தி. மு. க. கிளைக் கழகத் தோழர்களும், கழகச் சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்களும் சர்வகட்சியினருடன் சேர்ந்தோ, தனித்தோ அனுதாபக் கூட்டங்கள் நடத்தியும், ஊர்வலங்கள் போன்றவற்றில் கலந்து கொண்டும் தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். இடமின்மையின் காரணமாக அந்நிகழ்ச்சிகள் எல்லாம் சுருக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன :—

வங்கனூர் :

21—10—56 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகம், வ. உ. சி. வாசகசாலை, வடக்கெல்லை பாதுகாப்புக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்கள் மௌன ஊர்வலம் சென்றனர். மடத்தருகில் திரு முனுசாமி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பலர் பேசினர்.

திருப்பூர் :

15-10-56-ல், இங்குள்ள 3 ஆலைகளைச் சேர்ந்த தி.மு.க., பி.சோ., கம்யூ., சோஷலிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் ½ மணி நேரம் அர்த்தால் நடத்தி, முக்கியத் தெருக்கள் வழியாக மௌன ஊர்வலம் வந்தனர்.

அண்ணாமலைநகர் :

14-10-56 மாலை திருவேட்களத்தில் தோழர் செவந்திர பாண்டியன் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உசிலம்பட்டி :

14-10-56 காலை 10 மணிக்கு ஓழப்புதூரிலிருந்து சர்வகட்சியினரடங்கிய ஊர்வலம் நடைபெற்றது சந்தைத் திடலில் திரு. வீ. வீரணன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. சர்வ கட்சித் தோழர்கள் பலர் பேசினர்.

மணப்பாறை :

14-10-56 மாலை 6 மணிக்கு நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மேலூர் :

16-10-56 பகல், வர்த்தக சங்கத்தின் சார்பில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன மாலை 3 மணிக்கு பூங்குளி திடலிலிருந்து தோழர் முத்துசாமி தலைமையில் சர்வகட்சியினரடங்கிய மௌன ஊர்வலம் நடைபெற்றது

பனைமடல் :

22—10—56ல், தோழர் ஆர் கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்களனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்தனர்.

பல்லடம் :

21—10—56 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகத் தோழர்கள், பி. சோ கட்சித் தோழர்களடங்கிய ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

குடியேற்றம் :

22—10—56ல், மக்கள் மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் கே. வி கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

விருதுநகர் :

21—10—56ல், தேசபந்து மைதானத்தில், தோழர் பரிபேச் மாரியப்பா தலைமையில் சர்வகட்சி சார்பில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், தி. மு. கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் பி. சோ. ஆகிய கட்சித் தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இறுதியில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்மயநாயக்கனூர் :

21—10—56 இரவு 9 மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் முத்து தலைமையில் நடைபெற்றது. மூன்று நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

தென்காசி :

21—10—56 மாலை 7 மணிக்கு, கிளைக் கழகத்தில் தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சேவூர் :

21—10—56 இரவு 8½ மணிக்கு தோழர் கே. எம். சாரங்கபாணி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

பூக்குளம் :

21—10—56ல் தோழர் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கவுந்தப்பாடி :

21—10—56 காலை 9½ மணிக்கு உயர்நிலைப் பள்ளி மைதானத்திலிருந்து தி. மு. கழகம், தமிழரசுக் கழகம், முற்போக்கு வாலிபர் சங்கம் ஆகியவற்றின் தோழர்களடங்கிய சைக்கிள் ஊர்வலம் பல ஊர்கள் வழியாகச் சென்று மீண்டும் பள்ளி மைதானத்தை அடைந்ததும், அனுதாபம் தெரிவித்துப் பொதுக்கூட்டம் நடைபெற்று, அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பெங்களூர் :

21—10—56 காலை 10 மணிக்கு சீராமபுரம் கழக மனையில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், தோழர்கள் பலர் அனுதாப உரை நிகழ்த்தினர்.

சேலம்-செவ்வாய்பேட்டை

24—10—56 மாலை 6 மணிக்கு தோழர் ஆர். முருகேசன் கடையில் தோழர் இறைமணி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தொடையூர் :

21—10—56-ல் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தில். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோனேரிப்பட்டி :

21—10—56 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் என். ஜபமாலை தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டதுடன் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கவசம்பட்டு :

21—10—56ல், தோழர் கே. வி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

செயங்கொண்டம் :

21—10—56 மாலை 6 மணிக்கு, காந்தி திடலில், தோழர் வைத்திலிங்கம் தலைமையில், சர்வ கட்சியினர் சார்பில் அனுதாபம் நடைபெற்றது. தி மு. கழகம், தி கழகம், ஆகியவை சார்பில் தோழர்கள் பலரும், காங்கிரஸ் ஊழியர் திரு. அழகேசம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

காங்கேயநல்லூர் :

21—10—56ல் சர்வ கட்சியின் சார்பில், விசைத்தறி எதிர்ப்பு சங்கரலிங்கனார் மறைவு அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகம், தமிழரசுக் கழகம், பி. சோ. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் சொற்பொழிவாற்றினர். விருதம்பட்டிலிருந்து திரு. வி. கே. லால் தலைமையில் வந்த மௌன ஊர்வலம் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது.

திருவையாறு :

21—10—56 மாலை 5½ மணிக்கு தோழர் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் என். எஸ் இளங்கோ, ஏ. ஆர். சுந்தரம், தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வளவனூர் :

21—10—56-ல், தோழர் க. பழனியப்பன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் முடிவில், அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதூர்பாளையம் :

21—10—56-ல் கழகத் தோழர்களும், சில காங்கிரஸ் தோழர்களும் உள்ளிட்ட ஊர்வலம், தோழர் பி. என். தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கழகத் தோழர்களும், காங்கிரஸ் தோழர் காளியப்பனும் சொற்பொழிவாற்றினர்.

குடந்தை :

21—10—56 மாலை 5 மணிக்கு தி. மு. கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி ஆகியவை சார்பில் ஊர்வலமும், அரண்மனைத் தோட்டத்தில் சர்வகட்சி சார்பில் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது. சர்வ கட்சித் தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

திருவண்ணாமலை :

21—10—56-ல், சர்வகட்சியினர் சார்பில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

காட்டுப்பாடி :

21—10—56 மாலை சர்வகட்சியினர் சார்பில் மாபெரும் மௌன ஊர்வலம் நடைபெற்று, மாலை 5 மணிக்கு வ. உ. சி. பூங்காவை அடைந்ததும், தோழர் டி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற அனுதாபப் பொதுக்கூட்டத்தில் சர்வகட்சித் தோழர்களும் பேசினர்.

கனியாபட்டி :

21—10—56-ல், தோழர் பெ. வையாபுரி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மீஞ்சூர் :

21—10—56 மாலை 4 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. திரு. திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். மேலும் தி. மு. கழகத் தோழர்களும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

பம்பாய்—தாராவி :

21—10—56 இரவு 7½ மணிக்கு திராவிடரகத்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், தோழர்கள் பலரும் சொற்பொழிவாற்றினர்.

திண்டிவனம் :

21—10—56 மாலை 6 மணிக்கு கிருஷ்ண விலாசம் அச்சகத்தில், தோழர் ஆ. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மேலூர் (செங்கற்பட்டு):

21-10-56 மாலை தோழர் சி. ஏழுமலை தலைமையில் அனுதாப ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் தோழர் இரா. சண்முகம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

உசிலம்பட்டி :

14-10-56 மாலை 5 மணிக்கு தோழர் டி. என். தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் விருதை திரு. சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்தும், மற்றும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வாணியம்பாடி :

21-10-56ல், இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் மௌன ஊர்வலம் நடத்தினர். அன்று முழுவதும் கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. பகல் 12 மணிக்கு, நகர முனிசிபல் பூங்காவில், தோழர் பக்ருதீன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி :

21-10-56 மாலை 4 மணிக்கு, தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, தமிழரசுக் கழகம் ஆகியவை சார்பில் ஆர்வி மில் தொழிலாளர் சங்கத்தின்முன்பிருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டு வ. உ. சி. திடலை அடைந்ததும். 7 மணிக்கு, தோழர் சந்தானம் (சோஷ) தலைமையில் நடைபெற்ற அனுதாபக்கூட்டத்தில் தோழர்கள் எம். எஸ் சிவசாமி (தி. மு க) சங்கரநாராயணன் (கம்), முனியசாமி (சோஷ), ஆழ்வார் (த. க) இரங்கலுரையாற்றினர்.

ஆமதாபாத் :

21—10—56 மாலை 4½ மணிக்கு ஆமதாபாத் தி. மு கழக மத்தியக் குழுக் கூட்டம், நரோடா தி. மு கழகப் பணிமனையில், தோழர் இரா. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாண்டானூர் :

21-10-56-ல் கழகக் கட்டடத்தில் தோழர் எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துறையூர் :

துறையூர் (இரகுநாயகிபுரம்) தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆவடி :

21—10—56 மாலை 7 மணிக்கு, கழக இல்லத்தில் கழகச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கோவை-27வது வட்டம் :

22—10—56ல், முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றக் கூட்டத்தில், தோழர் க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர்.

விருத்தாசலம் :

21—10—56 காலை 10 மணிக்கு வானொலி திடலிலிருந்து காங்கிரஸ் நீங்கலாக மற்ற கட்சித் தோழர்களடங்கிய மௌன ஊர்வலம் நடைபெற்றது.

இராமச்சந்திராபுரம் :

21—10—56ல் சர்வகட்சியினர் சார்பில் தோழர் மு. மீனாட்சிசுந்தரம் தலைமையில் அனுதாபக் கூட்டமும், மௌன ஊர்வலமும் நடைபெற்றது.

கீழையூர் :

21—10—56 மாலை 7 மணிக்கு தோழர் செ. அன்னப்பன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

விச்சனூர் :

21—10—56 இரவு 9 மணிக்கு இராசன் பண்ணையில், பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், தோழர் இரா. துரைசாமி தலைமையில் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஆலந்தூர் :

21—10—56 இரவு 9 மணிக்கு கழக மாடியில் தோழர் எஸ். பாலன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேலூர் :

21—10—56 மாலை 6 மணிக்கு, சர்வ கட்சியினர் சார்பில், வேலூர் டவுன் ஹாலில் தோழர் சத்தியநாராயணன் தலைமையில் நடைபெற்றது. பல கட்சித் தோழர்கள் பேசினர். ஐந்து நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

இராமநாதபுரம் (கோவை மாவட்டம்)

21—10—56ல், கிளைக் கழகப் பணிமனையில், கழகச் செயலாளர் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடம்பூர் :

21—10—56 மாலை 4½ மணிக்கு தோழர் சி. இராமசாமி தலைமையில், தோழர் சங்கரலிங்கனார் உருவத்துடன் மௌன ஊர்வலம் நடைபெற்றது.

சிதம்பரம் :

16—10—56 இரவு 9 மணிக்கு, திரு. வி. க. படிப்பகச் சொற்பயிற்சி மன்றச் சார்பில், தோழர் கே. சிவப்பிரகாசம் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசிய பின் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாரண்டஅள்ளி :

21-10-56-ல் திரு. கரிவேங்கடம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தமிழரசுக் கழகத் தோழர்களும், தி. மு. கழகத் தோழர்களும் பேசினர்.

கடையநல்லூர் :

17—10—56 இரவு 8 மணியளவில், தினசரி மார்க்கெட் தெருவில், தோழர் வி. எஸ். எஸ். பெருமாள் ராசா தலைமையில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில், சர்வ கட்சித் தோழர்கள் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உடனே போரை நிறுத்துமாறு ஐ. நா.-வில் மீண்டும் தீர்மானம்

அவசரகால ஐ. நா. படை நிறுவவும் கோரிக்கை

பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஆதிபத்தியவாதிகளுக்கு இறுதி எச்சரிக்கை

"எகிப்தில் நிகழும் போரை நிறுத்துவதற்காக ஐ நா. சபை ஒரு அவசரக்காலப் படை திரட்ட வேண்டும்; அதற்கு ஐ நா. பொதுச்செயலாளர் 48 மணி நேரத்திற்குள் ஒரு திட்டம் தரவேண்டும்" என்று, ஐ. நா.-வில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

'உடனடியாகப் போர் நிறுத்தம் வேண்டும் என்ற தீர்மானத்தை மீண்டும் இந்தச் சபை வலியுறுத்துகிறது; ஐ. நா. செயலாளர், 12 மணி நேரத்திற்குள்ளாக இதுபற்றித் தகவல் தெரிவிக்க வேண்டும்" என்று, மற்றுமோர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

கனடா கொண்டுவந்த முதல் தீர்மானத்திற்கு ஆதரவாக 57 வாக்குகள் கிடைத்தன; எவரும் எதிர்க்கவில்லை. 19 பேர் நடுநிலை வகித்திருக்கின்றனர்.

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகள் சார்பில் இந்தியா கொண்டுவந்த இரண்டாம் தீர்மானத்திற்கு ஆதரவாக 59 வாக்குகள் கிடைத்திருக்கின்றன; 5 பேர் எதிர்த்து வாக்களித்தனராம்; 12 பேர் நடுநிலை வகித்தனராம்.

இந்த முறையும் ஐ. நா.—வின் விசேடக் கூட்டம் எகிப்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே கூட்டப்பட்டிருக்கிறது.

கடலுக்குக் கீழே

எண்ணெயைத் தேடும் முயற்சி

பிரிட்டனில், கடற்கரைக்கு அடியில் எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கலாம் என்று தெரிகிறது

ஸ்கானேஜ் - லல்வர்த் குடாவில் கடலுக்குக் கீழே, பல ஆயிரம் அடிகள் துளையிட்டுப் பார்க்கும் முயற்சியில் பிரிட்டிஷ் பெட்ரோலியம் கம்பெனி ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

துளைக் கருவிகளை ஏற்றிச்செலவும் தளமாகப் பயன்படுத்தவும் 'சீஸலிம்' என்ற கப்பலில் தகுந்த மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

பாரசீக வளைகுடாவிலுள்ள தாஸ் தீவுக்கு அருகில், கடலில் எண்ணெய் ஊற்றுத் தேடும் முயற்சி தொடங்கப்படும்

காமன்வெல்த்திலிருந்து வெளியேறு

டில்லிக்கு ஆச்சாரியார் கோரிக்கை

சென்னை, நவ. 4—

"உடனே போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற ஐ நா. தீர்மானத்தை பிரிட்டன் ஏற்க மறுத்துவிட்ட பிறகு, இந்தியா தொடர்ந்து காமன்வெல்த் உறவுகளை வைத்துக் கொண்டிருக்கக்கூடாது"

என்று, ஆச்சாரியார் அவர்கள் கூறியிருக்கிறார்.

சென்னையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களுக்கு வஞ்சனை புரிந்துவிட்டது என்றும் எடுத்துரைத்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் பேசிய தோழர்கள் எம். ஆர். வெங்கட்ராமன், ப ஜீவானந்தம் ஆகியோர், கிடைத்துள்ள தமிழ் 'ராஜ்ய'த்தைத் தாங்கள் வரவேற்பதாகவும், ஆனாலும், அதனைக் காப்பதற்குத் தமிழ் மக்கள் விழிப்போடிருக்க வேண்டும் என்றும், ஏனெனில், டில்லி சர்க்கார் தட்சிணப் பிரதேசத்தைத் திணிக்க சூழ்ச்சி செய்து வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தோழர்கள் எஸ். இராமநாதன், எஸ். பி. ஆதித்தன் (சோஷலிஸ்டு), தமிழரசுக் கழகத் தோழர் ஞானதாசன் ஆகியோரும் பேசினர்.

தோழர் கே. அருணாசலம் தீர்மானங்களைக் கொண்டு வந்தார்.

இறுதியாகப் பேசிய தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமிழ்ப் பகுதிகளைத் தமிழர்கள் இழந்திருப்பதற்கு சென்னை மந்திரிகளின் கையாலாகாத்தனமும், அவர்களது தமிழ்ப் பற்றற்ற போக்கும், உணர்ச்சியற்ற நிலையும்தான் காரணம் என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும், 'தமிழ் நாடு என்று பெயரிட மறுத்துவிட்ட காமராசர் சர்க்காரின் போக்கு தமிழர்தம் தன்மானத்திற்குத் தரப்படும் அறைகூவல்' என்றும் எடுத்துக் காட்டினார்.

டில்லி தமிழகத்திற்கு இழைத்து வரும் ஓரவஞ்சனையையும் பொதுச் செயலாளர் சூசகமாக எடுத்துரைத்து தமிழகம் உருப்பெற்று சிறப்புற வாழவழி என்ன என்பதையே தமிழர்கள் இந்த நேரத்தில் சிந்திக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சிங்கப்பூர் — சிலேத்தாரில் நடிப்பு-இசைப் புலவர்

தி. மு. கழகச் சார்பில் மகத்தான வரவேற்பு

நடிப்பு-இசைப் புலவர் கே ஆர். இராமசாமி அவர்களுக்கு ஆ. எ. எப். சிலேத்தார் திராவிடமுன்னேற்றக் கழகம் 6—10—56 அன்று மகத்தான வரவேற்பு அளித்துள்ளது.

கழகக் கொடிகள் மேடையை அழகுப்படுத்திக் கொண்டிருந்தன.

திரு. சுப்பையா அவர்கள் வரவேற்க, செயலாளர் குழந்தைவேலு, நடிப்பு-இசைப்புலவருக்கும், மற்றும் அவருடைய குழுவின் முக்கிய நடிகை தாம்பரம்லலிதாவுக்கும் மாலை அணிவித்தார்.

விழாவிற்கு கோ. சாரங்கபாணி தலைமை வகித்தார். பலர் பாராட்டுரை வழங்கினர்.

நடிப்பு-இசைப் புலவர் பதிலளிக்கையில், தமிழ்க் கலை வளர வேண்டுமானால் நடிகை, நடிகர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் பேசுகையில், அன்றாடம் நல்ல அரசியல், பொருளாதார சீர்திருத்த கருத்துக்கள்; தாங்கிவரும் 'தமிழ் முரசு' போன்ற ஏடுகளை அனைவரும் படித்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேர்தல் நிதி

27-10-56 அன்று மாலை, சென்னை—இராயபுரம் சிங்காரவேலர் நினைவு மன்றத்தின் ஆண்டு விழா நடைபெற்றபோது அண்ணா அவர்களிடம் தேர்தல் நிதிக்காக ரூ. 101 தரப்பட்டது—வரப்பெற்றோம்.

ஃ ஃ ஃ

28-10-56 அன்று மாலை சென்னை — சிந்தாதிரிப் பேட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது அண்ணா அவர்களிடம் தேர்தல் நிதிக்காக ரூ. 61 தரப்பட்டது—வரப்பெற்றோம்.

ஃ ஃ ஃ

29-10-56 அன்று சென்னை—திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டபோது தோழர் ஒருவர் தந்த ரூ. 25 வரப்பெற்றோம்.

ஃ ஃ ஃ

12-8-56ல், இராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம், தேவகோட்டை ராம்நகர் பகுதி மக்கள் சார்பில், தி. மு. க. தேர்தல் நிதிக்காகத் தரப்பட்ட ரூ. 10 வரப்பெற்றோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்

*******-****-******

அறிவிப்பு

★

அண்மையில், திருச்சியில், முதலமைச்சர் காமராசரும், பிறரும் பேசிய காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக்குழப்பத்திற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும் சில செய்தித்தாள்கள் வெளியிட்டுள்ளன.

திருச்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை விவரம் கேட்டதில், அக்குழப்பத்திற்கும், கழகத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை யென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதைப்பற்றி நம் கழகத் தோழர்கள் பொருட்படுத்தவில்லையென்பதை அனைவரும் அறிவர். கழகத் தோழர்கள் அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதற்கு மாறான செய்திகளை வெளியிடும் செய்தித் தாள்களின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

இப்பொழுது சென்னை அமைச்சர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் பொது மக்களின் கருத்தை உணராமல் அவர்களின் மனவேதனையை மேலும் கிளறும் வகையில்தான் பேசிவருகின்றனர்; எனினும், பொது மக்களும், குறிப்பாகக் கழகத் தோழர்களும் இவைகளைப் பொருட்படுத்தாமல் எங்கணும் அமைதியை நிலைநாட்ட முயலுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

*******-*********-**

'ஈடனுக்காக நாங்கள் சாகத் தயாரில்லை'

'அவர் பதவியிலிருந்து வெளியேற வேண்டும்'

இலண்டன் மக்கள் ஆர்ப்பாட்டம்

'ஈடன் பதவியிலிருந்து வெளியேற வேண்டும்' என்ற ஒலி முழக்கம் எழுப்பிக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் வீட்டுமுன்பாக (டவுனிங் தெரு) படையெடுத்திருக்கின்றனர்; இந்தப் 'படையெடுப்பின்'போது, போலீசாருடன் ஏற்பட்ட மோதுதல்களை ஒட்டிப் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பிரிட்டனின் ஆக்கிரமிப்பை எதிர்த்து, தொழிற்கட்சியினர் இங்கிலாந்து முழுதும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் துவங்குவதற்கு முன்பு டிரபால்கர் மைதானத்தில் சுமார் இருபதாயிரம் லண்டன் மக்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில், தொழிற்கட்சித் தலைவர்கள் ஈடனின் போக்கைக் கண்டித்து முழக்கமிட்டிருக்கின்றனர்

'ஈடன் வெளியேற வேண்டும்; ஈடனுக்காகச் சண்டையிட்டு நாங்கள் சாக மாட்டோம்' என்று கூடியிருந்த மக்கள் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

ஈடனது இல்லத்தை எண்ணற்ற போலீசார் பாதுகாத்துவருகின்றனர் என்று தெரியவருகிறது

"கிப்போம்" என்ற வாசகங்கள் கொண்ட துண்டுபிரசுரங்களை, எகிப்துமீது, பிரிட்டிஷ்—பிரெஞ்சு விமானங்கள் வீசிவருகின்றனவாம்.

3 மைல் தூரத்தில் இஸ்ரேல் படைகள்

லண்டன், நவ. 4—

இஸ்ரேல் படைகள் சூயஸ் கால்வாய்ப் பகுதிக்கு 3 மைல் தூரத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான கட்டம்

நியூயார்க், நவ. 4—

பிரிட்டிஷ், பிரெஞ்சு படைகள் அடுத்த 48 மணி நேரத்தில் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் இறக்கப்படக் கூடுமாம்.

'பாரச்சூட்' மூலமும், கப்பல்களிலிருந்தும் படைகள் இறக்கப்படக் கூடுமாம். ஆனல் பலம்பொருந்திய எகிப்து படைகள் தென்கோடியிலும், வடகோடியிலும் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயமுறுத்தல்

நிகோசியா, நவ. 4—

"எங்கள் நோக்கத்தை அடைய எங்களிடம் பலம் இருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்; அவசியமானல் அந்தப் பலத்தை உபயோ

எண்ணெய்க் குழாய்

வாஷிங்டன், நவ. 4—

சவூதி அரேபியாவிலிருந்துவரும் அமெரிக்காவுக்குச் சொந்தமான எண்ணெய்க் குழாய் தகர்க்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூழ்கியது

லண்டன், நவ. 4—

7,000 டன் எடையுள்ள பிரெஞ்சு குருய்சர் ஒன்றையும், பிரிட்டிஷ் நாசகாரி ஒன்றையும் எகிப்து மூழ்கடித்து விட்டதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

சூயஸ்மீது தாக்குதல்

கெய்ரோ, நவ. 4—

பிரிட்டிஷ் பிரெஞ்சு கடற்படைகள் சூயஸைத் தாக்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

அட்லி கண்டனம்

புதுடில்லி, நவ 3—

'எகிப்து சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை முற்றிலும் தவறானது—முட்டாள்தனமானது' என்று முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி கூறியுள்ளார்.

அரசினர் கலைக் கல்லூரி

சிறப்புக் கூட்டம்

சென்னை மவுண்ட் ரோடிலுள்ள கலைக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக 6-11-56 மாலை 4-மணிக்கு 'வள்ளுவர் நாள்' விழாக் கொண்டாடப்பெறும். அது போது தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஹங்கேரி பிரதமர் கைது

புதிய சர்க்கார் அமைந்துவிட்டதாம்

லண்டன், நவ. 4—

ஹங்கேரிய 'எதிர்ப் புரட்சி' ஒடுக்கப்பட்டு விட்டதாகவும், பிரதமர் நாகியும், இதர மந்திரிகளும் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும், புதியதொரு கம்யூனிஸ்டு சர்க்கார் அமைக்கப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

விஞ்ஞானம் வளருகிறது!

மிகச் சிறிய 'ராடார்' சாதனம்

உலகத்தில் மிகச் சிறிய 'ராடார் சாதனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது. இந்தச் சாதனம் 6,000 கெசம் வரையில் காண்பதற்குத் துணை செய்யும். இது 14 அங்குல உயரமும் 14 அங்குல நீளமுமுள்ள ஒரு உலோகப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. சிறிய மோட்டார் ஜெனரேட்டரால் அது இயங்குகிறது. ஒரு ஆள் இதனை எளிதாக எடுத்துக்கொண்டு போகமுடியும். இந்தச் சாதனம் ஜெனரேட்டர் ஆகியவற்றின் மொத்த எடை 85 ராத்தல். மற்ற ராடார் சாதனங்களின் எடையோ ஒரு டன்னும் அதற்கு மேலும் இருக்கும்.

இந்தச் சாதனம், ஒரு வண்டியையாவது, இராணுவ வீரனையாவது கண்டு பிடித்ததும் காணக்கூடிய அடையாளத்துக்குப் பதிலாக கேட்கக்கூடிய அடையாளம் பிறப்பிக்கிறது.

அணு இயக்கும் மீன்பிடி படகு!

வாஷிங்டன்:—மீனை மயக்கிப் பிடித்துக் கெடாமல் பாதுகாத்துக் குளிர்ச்சியாய் வைத்துக்கொள்ள 'அணு இயக்கும் மீன்பிடி படகு' அமைக்கலாமாம்! கப்பலில் உள்ள அணு உலைக் கப்பலை இயக்கப் பயன்படுவதுமன்றி, மீன்களை மயக்கிப் பிடித்துக் கப்பலில் போடுவதற்கு தண்ணீரில் மின்சாரம் செலுத்தவும் உதவலாமாம்! கப்பல் கரைவந்து சேரும்வரை குளிர்ச்சி அறைகளில் மீன் கெடாமல் பாதுகாக்கப்படுமென்றும், பிடித்த மீன் மிகுதியாய்க் கெட்டுப் போகும் வெப்பமான இடங்களுக்கு இந்தக் கப்பல்கள் பயன்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டக் காலத்தில், நாட்டில் கனி எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்காக, மொத்தம் ரூ. 30 கோடி செலவு மதிப்புள்ளத் திட்டமொன்றை இந்திய சர்க்கார் தயாரித்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.